| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் - 22 சுற்றுச்சூழல் மேலாண்மை | அலகு | 22 |
|---|---|---|---|
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 12 |

**22 சுற்றுச்சூழல் மேலாண்மை**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கீழுள்ளவற்றுள் எது/எவை புதைபடிவ எரிபொருட்கள் i. தார் ii. கரி iii. பெட்ரோலியம்

அ) i மட்டும் ஆ) i மற்றும் ii இ) ii மற்றும் iii ஈ) i, ii மற்றும் iii

2. கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக கீழுள்ளவற்றுள் எவற்றினை நீவிர் பயன்படுத்துவீர்?

அ) கழிவுகள் உருவாகும் அளவைக் குறைத்தல்

ஆ) கழிவுகளை மறு பயன்பாட்டு முறையில் பயன்படுத்துதல்

இ) கழிவுகளை மறுசுழற்சி செய்தல்.

ஈ) மேலே உள்ளவை அனைத்தும்,

3. வாகனங்கள் வெளியேற்றும் புகையில் உள்ள வாயுக்கள் i. கார்பன் மோனாக்சைடு ii. சல்பர் டை ஆக்சைடு iii. நைட்ரஜன் ஆக்ஸைடுகள்

அ) i மற்றும் ii ஆ) i மற்றும் iii இ) ii மற்றும் iii ஈ) i, ii மற்றும் iii

4. மண்ணரிப்பைத் தடுக்கப் பயன்படுவது

அ) காடுகள் அழிப்பு ஆ) காடுகள் / மரம் வளர்ப்பு

இ) அதிகமாக வளர்த்தல் ஈ) தாவரப் பரப்பு நீக்கம்

5. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம்:

அ) பெட்ரோலியம் ஆ) கரி இ) அணுக்கரு ஆற்றல் ஈ) மரங்கள்

6. கீழுள்ளவற்றுள் மண்ணரிப்பு அதிகமாக காணப்படும் இடம்

அ) மழைப்பொழிவு இல்லாத இடம் ஆ) குறைவான மழை பொழிவு உள்ள இடம்

இ) அதிகமான மழைப்பொழிவு உள்ள இடம். ஈ) இவற்றில் எதுவுமில்லை.

7. கீழுள்ளவற்றுள் தீர்ந்து போகாத வளம் / வளங்கள்

அ)காற்றாற்றல் ஆ) மண்வளம் இ) வன உயிரி ஈ)மேலே உள்ள அனைத்தும்

8. கிராமங்களில் கிடைக்கும் பொதுவான ஆற்றல் மூலம் / மூலங்கள்

அ) மின்சாரம் ஆ) கரி

இ) உயிவாயு ஈ) மரக்கட்டைகள் மற்றும் விலங்குகளின் கழிவு

LIVEWORKSHEETS

9. பசுமை இல்ல விளைவு என குறிப்பிடப்படுவது

அ) பூமி குளிர்தல்

ஆ) புறஊதாக் கதிர்கள் வெளி செல்லாமல் இருத்தல்

இ) தாவரங்கள் பயிர் செய்தல்

ஈ) பூமி வெப்பமாதல்

10. மிக மலிவான வழக்கமான வர்த்தக ரீதியிலான தீர்ந்து போகாத ஆற்றல் மூலம்

அ) நீர் ஆற்றல் ஆ) சூரிய ஆற்றல் இ) காற்றாற்றல் ஈ) வெப்ப ஆற்றல்

11. புவி வெப்பமாதலின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவு

அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) பனிப்பாறைகள் உருகுதல்.

இ) தீவுக்கூட்டங்கள் முழ்குதல் ஈ) மேலே கூறிய அனைத்தும்.

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் காற்றாற்றல் குறித்த தவறான கூற்று எது?

அ) காற்றாற்றல் ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

ஆ) காற்றாலையின் இறக்கைகள் மின்மோட்டார் மூலம் இயக்கப்படுகின்றன.

இ) காற்றாற்றல் மாசு ஏற்படுத்தாமல் உற்பத்தி செய்யப்படுகிறது.

(ஈ) காற்றாற்றலைப் பயன்படுத்துவதன் மூலம் புதைபடிவ எரிபொருட்கள் பயன்பாட்டினைக் குறைக்கலாம்.

ஆக்கம் செ.பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர். அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்

LIVEWORKSHEETS